# உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

# நீதி நிருவாகம்

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2022 - 2023

### மானியக் கோரிக்கை எண். 3


**எஸ். ரகுபதி**
சட்டத்துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2022

# <u>பொருளடக்கம்</u>


| வ. எண் | பொருள் | பக்க எண் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1 |
| 2. | நீதிமன்றங்களின் படிநிலை அமைப்பு | 1–2 |
| 3. | உயர்நீதிமன்றம், சென்னை மற்றும் அதன் மதுரைக்கிளை | 2–5 |
| 4. | நீதிமன்றங்களின் எண்ணிக்கை | 5 |
| 5. | புதிய நீதிமன்றங்களை ஏற்படுத்தல் | 5 |
| 6. | உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்கள், சென்னை | 6–8 |
| 7. | உரிமையியல் நீதிபதிகள் நியமனம் | 8 |
| 8. | மாவட்ட நீதிமன்றங்கள் | 8–12 |
| 9. | சிறப்பு நீதிமன்றங்கள் | 12–26 |
| 10. | நீதிமன்ற மேலாளர்கள் | 26 |
| 11. | நீதிமன்ற கட்டடங்கள், நீதிபதிகளின் குடியிருப்புகள் மற்றும் இதர உட்கட்டமைப்பு வசதிகள் | 26–27 |
| 12. | ஒன்றிய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டம் | 27–28 |
| 13. | நீதித்துறை அமைப்புகளை கணினிமயமாக்கும் திட்டம் | 29–31 |
| 14. | தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்ப வசதி | 31–34 |

| வ. எண் | பொருள் | பக்க எண் |
|---|---|---|
| 15. | நீதித்துறை முத்திரைத்தாள் மின்னணுமயமாக்கல் | 34–36 |
| 16. | பாலின உணர்திறன் மற்றும் உள் இணக்கக் குழுவிற்கான இணைய முகப்பு | 36–37 |
| 17. | செலவினங்களின் வகைப்பாடு | 37 |
| 18. | தமிழ் வழியிலான சட்ட இதழ் | 37–38 |
| 19. | நீதித்துறை பயிற்சிக் கழகம் | 38 |
| 20. | உயர்நீதிமன்ற நடவடிக்கைகளில் தமிழ் மொழியை பயன்படுத்துதல் | 39 |
| 21. | தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நல நிதி | 39–40 |
| 22. | இளம் வழக்குரைஞர் உதவித் தொகை | 40 |
| 23. | தமிழ்நாடு வழக்குரைஞர்களின் எழுத்தர்கள் நல நிதி | 40 |
| 24. | தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணைக்குழு | 41–50 |
| 25. | அரசு வழக்காடும் துறை, உயர்நீதிமன்றம், சென்னை | 51–52 |
| 26. | குற்ற வழக்குத் தொடர்வு இயக்ககம் | 52–53 |
| 27. | முடிவுரை | 54 |
| 28. | பிற்சேர்க்கை 1 முதல் 4 வரை | 55–63 |

# உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை
# நீதி நிருவாகம்
# மானியக் கோரிக்கை எண். 3
# கொள்கை விளக்கக் குறிப்பு 2022 – 2023

## முன்னுரை

இந்திய அரசியலமைப்புச் சட்டம், நீதி நிருவாகத்தை, நமது ஜனநாயகத்தின் முக்கிய தூணாக அங்கீகரித்துள்ளது. நீதி நிருவாகம், சுதந்திரமாகவும், நியாயமாகவும் செயல்படுவதற்கு ஏதுவாக, போதுமான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு இவ்வரசு என்றும் முன்னுரிமை அளித்து வருகிறது.

## 2. நீதிமன்றங்களின் படிநிலை அமைப்பு

புதுதில்லியிலுள்ள இந்திய உச்சநீதிமன்றம் நமது நாட்டின் முதன்மை நீதிமன்றமாக உள்ளது. இதன் கட்டுப்பாட்டின் கீழ் மாநிலங்களிலுள்ள அனைத்து உயர்நீதிமன்றங்களும் செயல்படுகின்றன.

இம்மாநிலத்திலுள்ள நீதித்துறையின் படிநிலை அமைப்பு பிற்சேர்க்கை 1–ல் கொடுக்கப்பட்டுள்ளது.

## 3. உயர்நீதிமன்றம், சென்னை மற்றும் அதன் மதுரைக்கிளை

3.1. சென்னை உயர்நீதிமன்றம் மாநிலத்தின் உயரிய நீதி அமைப்பு ஆகும். இந்த உயர்நீதிமன்றத்திற்கு அனுமதிக்கப்பட்ட நீதிபதிகளின் எண்ணிக்கை 75. அவற்றுள், 61 நீதிபதிகளை கொண்டு தற்போது சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் அதன் மதுரைக் கிளை செயல்பட்டு வருகிறது. சென்னை உயர்நீதிமன்றம், உரிமையியல் வழக்குகளின் அசல் மனுக்களையும், சிறப்பு அசல் மனுக்களையும் (நீதிப்பேராணை அதிகாரம்) மற்றும் உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளின் மேல்முறையீட்டினை விசாரணை செய்யும் அதிகாரங்களை பெற்றுள்ளது, சென்னை மாநகர எல்லைக்குட்பட்ட வழக்குகளில் ரூ.1.00 கோடிக்கு அதிகமான மதிப்புள்ள வழக்குகளை

உயர்நீதிமன்றம் விசாரிக்கிறது. சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையின் அதிகார எல்லைக்குள் பின்வரும் 13 மாவட்டங்களில் உள்ளன:–

1. மதுரை
2. திண்டுக்கல்
3. புதுக்கோட்டை
4. தஞ்சாவூர்
5. திருச்சிராப்பள்ளி
6. கரூர்
7. சிவகங்கை
8. இராமநாதபுரம்
9. விருதுநகர்
10. திருநெல்வேலி
11. தூத்துக்குடி
12. கன்னியாகுமரி
13. தேனி

இம்மாவட்டங்களில் எழும் அசல் வழக்குகளின் அதிகார வரம்பினைத் தவிர, சென்னை உயர்நீதிமன்ற முதன்மை ஆயம் பெற்றுள்ள அனைத்து அதிகாரங்களையும் இந்நீதிமன்றம் கொண்டுள்ளது.

3.2. சென்னை உயர்நீதிமன்ற அதிகார எல்லைக்குள் புதுச்சேரி யூனியன் பகுதி நீதிமன்றங்களும் அடங்கும். புதுச்சேரி யூனியன் பகுதி தொடர்பான பணிகளைக் கவனிக்கும் அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் குறித்த செலவினம் முதற்கண் தமிழ்நாடு அரசால் மேற்கொள்ளப்பட்டு, பின்னர் அச்செலவுத் தொகை புதுச்சேரி அரசிடமிருந்து திரும்பப் பெறப்படுகிறது.

3.3. நீதிபரிபாலனம் செய்வதுடன், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி யூனியன் பகுதி உள்ளிட்ட அனைத்து சார்நிலை நீதிமன்றங்களின் முழு

நிருவாகப் பொறுப்பையும் சென்னை உயர்நீதிமன்றம் மேற்கொள்கிறது.

## 4. நீதிமன்றங்களின் எண்ணிக்கை

இம்மாநிலத்தில் தற்போது, சிறப்பு நீதிமன்றங்களையும் சேர்த்து மொத்தம் 1288 நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன. இவற்றுள், சென்னை மாநகரில் 144 நீதிமன்றங்களும் இதர மாவட்டங்களில் 1144 நீதிமன்றங்களும் இயங்கி வருகின்றன. சென்னை மாநகரம் மற்றும் இதர மாவட்டங்களில் செயல்பட்டு வரும் நீதிமன்றங்கள் / தீர்ப்பாயங்களின் எண்ணிக்கை பற்றிய விவரங்கள் முறையே பிற்சேர்க்கை–2 மற்றும் 3–ல் கொடுக்கப்பட்டுள்ளன.

## 5. புதிய நீதிமன்றங்களை ஏற்படுத்தல்

2021–2022 ஆம் ஆண்டில் 25 புதிய நீதிமன்றங்கள் அமைப்பதற்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

## 6. உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்கள், சென்னை

6.1. மாநகர உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகாரவரம்பானது சென்னை மாநகர எல்லை முழுவதையும் கொண்டுள்ளது. வழக்கின் பண மதிப்பினை பொறுத்தமட்டில், உதவி நீதிபதிகள் ரூ.10.00 இலட்சம் வரையிலும், முதன்மை நீதிபதிகள் ரூ.10.00 இலட்சத்திற்கு மேல் ரூ.1.00 கோடிக்கு மிகாமலும் வரும் வழக்குகளை விசாரிக்கும் அதிகார வரம்பினைப் பெற்றுள்ளனர். சென்னை அமர்வு பிரிவிற்கு, இந்நீதிமன்றமே அமர்வு நீதிமன்றமாகவும் செயல்பட்டு வருகிறது.

6.2. 1882–ஆம் ஆண்டின் மாகாண சிறு வழக்குகள் நீதிமன்றங்கள் சட்டத்தின் கீழ் வரும் சிறு வழக்குகளையும், 1988–ஆம் ஆண்டின் மோட்டார் வாகனச் சட்டம் தொடர்பான வழக்குகளையும் விசாரிக்க சிறு வழக்குகள் நீதிமன்றங்கள் அதிகாரங்களை பெற்றுள்ளன. ஐந்தாவது மற்றும்

ஆறாவது சிறு வழக்குகள் நீதிமன்றங்கள் பிரத்யேக தீர்ப்பாயங்களாக செயல்படுகின்றன. தலைமை நீதிபதி மற்றும் இரண்டாவது, மூன்றாவது மற்றும் நான்காவது நீதிமன்றங்களின் நீதிபதிகள் சென்னை மாநகரில் 1988–ஆம் ஆண்டின் மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் எழும் வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தினை பெற்றுள்ளனர். பத்து முதல் பதினாறு வரையுள்ள நீதிமன்றங்களின் நீதிபதிகள், வாடகை கட்டுப்பாட்டு அதிகாரிகளாகவும் செயல்படுகின்றனர். மேலும், தலைமை நீதிபதி மற்றும் ஏழு, எட்டு மற்றும் ஒன்பதாவது நீதிமன்றங்களின் நீதிபதிகள் வாடகை கட்டுப்பாடு தொடர்பான மேல்முறையீட்டு வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தையும் பெற்றுள்ளனர்.

6.3. சென்னை மாநகரில் 37 பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் தற்போது இயங்கி வருகின்றன. பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் தத்தம் அதிகார வரம்புக்குட்பட்டு

சென்னையில் குறிப்பிட்டகாவல் நிலைய எல்லைக்குட்பட்ட வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தை பெற்றுள்ளன.

## 7. உரிமையியல் நீதிபதிகள் நியமனம்

2021 ஆம் ஆண்டில், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வணையத்தின் நேரடி நியமனத்தின் மூலம் 62 பேர் உரிமையியல் நீதிபதிகளாக பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

## 8. மாவட்ட நீதிமன்றங்கள்

8.1. 90 மாவட்ட நீதிமன்றங்கள் (ஏற்கனவே விரைவு நீதிமன்றங்களாக இருந்த 49 கூடுதல் மாவட்ட நீதிமன்றங்கள் உட்பட) இம்மாநிலத்தில் இயங்கி வருகின்றன. வழக்கின் பண மதிப்பை பொறுத்தமட்டில் ரூ.10.00 இலட்சம் மற்றும் அதற்கு மேல் உச்சவரம்பற்ற வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தினை மாவட்ட நீதிபதிகள் பெற்றுள்ளனர்.

மாநில தொழிலாளர் காப்புறுதிச் சட்டம், 1948, எஸ்டேட் ஒழிப்புச் சட்டம், 1948 மற்றும் மோட்டார் வாகனச் சட்டம், 1988 போன்ற சில குறிப்பிட்ட தனிச் சட்டங்களின் கீழ் எழும் வழக்குகளை விசாரிக்கும் சிறப்புத் தீர்ப்பாயங்களாகவும் மாவட்ட நீதிமன்றங்கள் செயல்படுகின்றன. மாவட்ட நீதிபதிகள் அவரவர் பகுதிகளுக்கான அமர்வு நீதிமன்ற நீதிபதிகளாகவும் உள்ளனர். இவர்கள் தத்தம் மாவட்டங்களில் எழக்கூடிய உரிமையியல் மேல் முறையீட்டு வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தையும், சார்நிலை நீதிமன்றங்களையும் ஆய்வு செய்யும் அதிகாரத்தையும் பெற்றுள்ளனர்.

8.2. மாநிலத்தில் 32 தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன, இந்நீதிமன்றங்களின் நிருவாக கட்டுப்பாட்டில் அந்தந்த மாவட்ட குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் இயங்குகின்றன. சில வகையான வழக்குகளில், உதவி அமர்வு நீதிபதிக்குரிய அதிகாரங்கள்

தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளன. அந்தந்த மாவட்ட தலைமை குற்றவியல் நடுவர் தங்கள் மாவட்டத்தில் உள்ள குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களில் ஆய்வினை மேற்கொள்வார்.

8.3. 165 சார்பு நீதிமன்றங்கள் இம்மாநிலத்தில் இயங்கி வருகின்றன. அவை ரூ.1.00 இலட்சத்திற்கு மேலும் ரூ.10.00 இலட்சத்திற்கு மிகாமலும் பணமதிப்பு கொண்ட அனைத்து உரிமையியல் வழக்குகளையும் விசாரிக்கும் அதிகாரத்தை பெற்றுள்ளன. மேலும், இந்நீதிமன்றங்கள், உதவி அமர்வு நீதிமன்றங்களாகவும் மற்றும் மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு தீர்ப்பாயங்களாகவும் செயல்படுகின்றன. மேலும், இந்நீதிமன்றங்கள் தத்தம் எல்லைக்குட்பட்ட மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்களின் முடிவிற்கெதிராக தொடரப்படும் ரூ.1.00 இலட்சம் வரையிலான மேல்முறையீட்டு

வழக்குகளை விசாரிக்கும் அதிகாரத்தையும் பெற்றுள்ளன.

8.4. 204 மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் இம்மாநிலத்தில் இயங்கி வருகின்றன. இந்நீதிமன்றங்கள் ரூ.1.00 இலட்சம் வரையிலான பண மதிப்புடைய வழக்குகளை விசாரிக்கும் அதிகார வரம்பை பெற்றுள்ளன. இந்நீதிமன்ற நீதிபதிகள் தங்கள் அதிகார வரம்புக்குட்பட்ட பகுதிகளுக்கு வாடகை கட்டுப்பாட்டு அதிகாரிகளாகவும் செயலாற்றுகின்றனர். மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் ஒவ்வொன்றும் அவற்றிற்கென்று வரையறுக்கப்பட்ட அதிகார எல்லையை கொண்டுள்ளன மற்றும் ரூ.20,000/- வரையிலான சிறு வழக்குகளையும் விசாரித்து வருகின்றன.

8.5. இம்மாநிலத்தில் ஏறக்குறைய அனைத்து வட்டங்களிலும் மொத்தம் 234 குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள்

இயங்கி வருகின்றன. இந்நீதிமன்றங்களில் மூன்றாண்டிற்கு மேற்படாத சிறைத் தண்டனையோ அல்லது ரூ.10,000/-ற்கு மிகையில்லாத அபராதமோ அல்லது இரண்டும் சேர்த்தோ விதிக்கக்கூடிய குற்ற வழக்குகள் மட்டுமே விசாரிக்கப்படுகின்றன.

8.6. வழக்கு தொடுக்கும் பொதுமக்களின் இன்னல்களை குறைப்பதற்காக மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டு உள்ளன. இந்நீதிமன்றங்கள் உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளை விசாரிக்கின்றன. மாநிலத்தில் தற்போது 75 மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன.

**9. சிறப்பு நீதிமன்றங்கள்**

9.1.குடிமை உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், 1955-ன் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை

விசாரிக்க கீழ்க்காணும் நான்கு சிறப்பு நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன:–

1. கூடுதல் அமர்வு நீதிமன்றம்–I, திருச்சிராப்பள்ளி
2. கூடுதல் அமர்வு நீதிமன்றம்–I, தஞ்சாவூர்
3. கூடுதல் அமர்வு நீதிமன்றம்–II, திருநெல்வேலி
4. கூடுதல் அமர்வு நீதிமன்றம்–III, மதுரை

பட்டியல் வகுப்பினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டம், 1989–ன் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை விசாரிப்பதற்கென கீழ்க்காணும் இடங்களில் சிறப்பு நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன:–

1. விழுப்புரம்
2. சிவகங்கை
3. திண்டுக்கல்

4. இராமநாதபுரம்
5. ஸ்ரீவில்லிப்புத்தூர்(விருதுநகர் மாவட்டம்)
6. புதுக்கோட்டை
7. கடலூர்
8. நாமக்கல்
9. தேனி
10. திருவண்ணாமலை
11. பெரம்பலூர்
12. தூத்துக்குடி
13. வேலூர்

இதர மாவட்டங்களில் அந்தந்த மாவட்டத்தில் உள்ள முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றங்களுக்கு மேற்குறிப்பிட்ட சட்டங்களின் கீழ் தொடுக்கப்பட்டுள்ள வழக்குகளின் மீது விசாரணை மேற்கொள்வதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

9.2. தென்மாவட்ட இனக் கலவரம் தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கென மதுரையில் ஓர் அமர்வு நீதிமன்றம் செயல்பட்டு வருகிறது.

9.3. பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டம், 2012-ன் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை பிரத்யேகமாக விசாரிப்பதற்கென சிறப்பு நீதிமன்றம், சென்னை, கோயம்புத்தூர், கடலூர், செங்கல்பட்டு (காஞ்சிபுரம் மாவட்டம்), நாகர்கோவில் (கன்னியாகுமரி மாவட்டம்), மதுரை, நாகப்பட்டினம், சேலம், சிவகங்கை, தஞ்சாவூர், திருநெல்வேலி, திருவண்ணாமலை, தூத்துக்குடி, வேலூர், விழுப்புரம் மற்றும் ஸ்ரீவில்லிபுத்தூர் (விருதுநகர் மாவட்டம்) ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. மேலும் திண்டுக்கல், தருமபுரி, தேனி மற்றும் திருவள்ளூர் ஆகிய நான்கு மாவட்டங்களில் நீதிமன்றங்கள் அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன.

9.4. மாநிலத்தில் 17 தொழிலாளர் நல நீதிமன்றங்கள் மற்றும் ஒரு தொழில் வழக்கு தீர்ப்பாயம் செயல்பட்டு வருகின்றன. இந்நீதிமன்றங்கள் தொழிலாளர் குறித்த சர்ச்சைகளையும், பாதிக்கப்பட்டவர்கள் தாக்கல் செய்யும் உரிமை கோரிக்கை மனுக்களையும் விசாரித்து தீர்ப்பு வழங்குகின்றன.

9.5. மாநிலத்தில் 32 குடும்பநல நீதிமன்றங்கள், திருமணம் மற்றும் குடும்ப விவகாரங்கள் தொடர்பான வழக்குகளில் இணக்கத்தை மேம்படுத்தவும் மற்றும் அவ்வழக்குகளை விரைந்து முடிக்கவும் குடும்பநல நீதிமன்றங்கள் சட்டம், 1984–ன் கீழ் செயல்பட்டு வருகின்றன. சென்னையில் ஏழு கூடுதல் குடும்பநல நீதிமன்றங்களும், நான்கு விடுமுறை கால குடும்ப நீதிமன்றங்களும் செயல்பட்டு வருகின்றன. மேலும், கோயம்புத்தூரில் ஒரு கூடுதல் குடும்பநல நீதிமன்றமும் செயல்பட்டு வருகிறது.

9.6. இம்மாநிலத்தில் பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் குற்ற வழக்குகளை பிரத்யேகமாக விசாரிப்பதற்கென 10 மகளிர் நீதிமன்றங்கள் மற்றும் 32 கூடுதல் மகளிர் நீதிமன்றங்கள் குற்றவியல் நடுவர் தரத்தில் செயல்பட்டு வருகின்றன. மேலும், மாநிலத்தில் 22 மகளிர் விரைவு நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.

9.7. குடும்ப வன்முறை சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை விசாரிப்பதற்கென ஒரு சிறப்பு நீதிமன்றம் கோயம்புத்தூரில் செயல்பட்டு வருகிறது.

9.8. பொருளாதார குற்றங்கள் தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கான மூன்று சிறப்பு நீதிமன்றங்களில் இரண்டு சென்னையிலும் ஒன்று மதுரையிலும் செயல்பட்டு வருகின்றன.

9.9. போலி முத்திரைத்தாள் மற்றும் கள்ள நோட்டு தொடர்பான வழக்குகளை

விசாரிப்பதற்கென சென்னையில் ஒரு சிறப்பு நீதிமன்றம் செயல்பட்டு வருகிறது.

9.10. தமிழ்நாடு வைப்பீட்டுதாரர்கள் (நிதி நிறுவனங்களில்) பாதுகாப்புச் சட்டம், 1997–ன் கீழ் பதிவு செய்யப்படும் குற்றங்கள் தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கு சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் மூன்று சிறப்பு நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.

9.11. அத்தியாவசியப் பொருட்கள் சட்டம், 1955–ன் கீழ் பதிவாகும் வழக்குகளை பிரத்யேகமாக விசாரிக்க சென்னை, மதுரை, கோயம்புத்தூர், புதுக்கோட்டை, சேலம் மற்றும் தஞ்சாவூர் ஆகிய இடங்களில் சிறப்பு நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.

9.12. மாநிலத்தில் மத்திய குற்றப்பிரிவு புலனாய்வு வழக்குகளை விசாரிப்பதற்கென பிரத்யேகமாக 8 சிறப்பு நீதிமன்றங்கள் செயல்பட்டு

வருகின்றன. அவற்றுள், சென்னையில் 6 நீதிமன்றங்களும், மதுரை மற்றும் கோயம்புத்தூரில் தலா ஒரு நீதிமன்றமும் உள்ளன. இவற்றுள், வங்கிகள் மற்றும் நிதி நிறுவன மோசடி தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கான ஒரு சிறப்பு நீதிமன்றம் சென்னையில் செயல்பட்டு வருகிறது.

9.13. பரிசுச் சீட்டு மற்றும் பணச்சுழற்சி திட்ட (தடைச்) சட்டம், 1978–ன் கீழ் பதிவு செய்யப்பட்ட குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை (CBCID) குற்ற வழக்கு எண்.3876/2009–ஐ விசாரிப்பதற்கென சென்னையில் ஒரு சிறப்பு நீதிமன்றம் செயல்பட்டு வருகிறது.

9.14. ஊழல் தடுப்புச் சட்டம், 1988 (மையச் சட்டம் 49/1988)–ன் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை பிரத்யேகமாக விசாரிப்பதற்கென சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, விழுப்புரம், சேலம், சிவகங்கை மற்றும்

திருநெல்வேலி ஆகிய இடங்களில் சிறப்பு நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.

9.15. சென்னையில் ஒரு சிறப்பு நீதிமன்றம் மத்திய குற்றப்பிரிவால் பதிவு செய்யப்படும் மோசடி வழக்குகள் மற்றும் குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் (CBCID) துறையின் சென்னை மாநகர வழக்குகளை பிரத்யேகமாக விசாரணை செய்வதற்காக அமைக்கப்பட்டு உள்ளது.

9.16. திருப்பத்தூரில் சந்தனக்கட்டை தொடர்பான குற்ற வழக்குகளை விசாரிப்பதற்கென ஒரு சிறப்பு குற்றவியல் நடுவர் நீதிமன்றம் செயல்பட்டு வருகிறது. மேலும், கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் வன குற்றங்கள் தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கென ஒரு சிறப்பு நீதிமன்றம் செயல்பட்டு வருகிறது.

9.17. போதை மருந்துகள் மற்றும் மன மயக்க பொருட்கள் சட்டம், 1985-ன் கீழ் பதிவு செய்யப்படும்

வழக்குகளை பிரத்யேகமாக விசாரிப்பதற்காக சென்னை மற்றும் மதுரை ஆகிய இடங்களில் தலா இரண்டு வீதம் நான்கு சிறப்பு நீதிமன்றங்களும் மற்றும் விழுப்புரத்தில் ஒரு நீதிமன்றமும் செயல்பட்டு வருகின்றன.

9.18. சென்னையில் இரண்டுசிறப்பு நீதிமன்றங்கள் (முதலாவது மற்றும் ஐந்தாவது கூடுதல் நீதிபதி) பயங்கரவாத மற்றும் சீர்குலைவு நடவடிக்கைகள் (தடுப்பு) சட்டம், 1987 (தற்போது நீக்கப்பட்டது)—ன் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளை விசாரிப்பதற்கு செயல்பட்டு வருகின்றன.

9.19. சென்னை மற்றும் கோயம்புத்தூரில் குண்டு வெடிப்பு வழக்குகளை பிரத்யேகமாக விசாரணை செய்வதற்காக இரண்டு சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சென்னை பூவிருந்தவல்லியில் செயல்படும் இந்நீதிமன்றம்

பொடா சட்டம், 2002 (மையச் சட்டம் 15/2002)–ன் கீழ் வரும் குற்றங்கள் தொடர்பான வழக்குகளையும் விசாரணை செய்கிறது.

9.20. சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (D&R) சட்டத்தின் விதி மீறல்கள் தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கென ஒரு சிறப்பு நீதிமன்றம் மதுரையில் செயல்பட்டு வருகிறது.

9.21. சென்னையில் இரு சிறப்பு நீதிமன்றங்கள் உட்பட 26 சிறப்பு நீதிமன்றங்கள் நில அபகரிப்பு வழக்குகளை விசாரிப்பதற்கென, ஒப்பளிக்கப்பட்டுள்ளன. இதன் விவரம் பிற்சேர்க்கை 4–ல் கொடுக்கப்பட்டுள்ளது.

9.22. சென்னையில் இரண்டு சிறப்பு நீதிமன்றங்களும் மற்றும் ஒரு கூடுதல் சிறப்பு நீதிமன்றமும், தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மீதான குற்றவியல் வழக்குகளை விசாரிப்பதற்கென

செயல்பட்டு வருகின்றன. இதுதவிர, மாவட்டத்தில் உள்ள குற்றவியல் நடுவர் நீதிபதிகளுக்கும், தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மீதான குற்றவியல் வழக்குகளை விசாரிப்பதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

9.23. இம்மாநிலத்தில், மோட்டார் வாகன விபத்து இழப்பீடு அசல் மனு மற்றும் நிலம் கையகப்படுத்துதல் போன்ற அசல் மனுக்கள் தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கென 36 சிறப்பு நீதிமன்றங்கள் செயல்படுகின்றன. மோட்டார் வாகன விபத்து இழப்பீடு அசல்மனுக்கள் தொடர்பான வழக்குகளை விசாரிப்பதற்கென கூடுதலாக 8 நீதிமன்றங்கள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன.

9.24. ஒன்பது இரயில்வே குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் வேலூர், கடலூர், கோயம்புத்தூர், சேலம், மதுரை, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களிலும், சென்னை எழும்பூர் மற்றும்

சென்னை சென்ட்ரல் இரயில் நிலையங்களிலும் இந்திய இரயில்வே சட்டம், 1989–ன் கீழ் இழைக்கப்படும் குற்றங்களை விசாரணை செய்வதற்கு செயல்பட்டு வருகின்றன.

9.25. சென்னையில் இரண்டு நீதிமன்றங்களும், காஞ்சிபுரம், விழுப்புரம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, நாமக்கல், சேலம், ஈரோடு, திண்டுக்கல் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் ஒரு நீதிமன்றமும் மொத்தம் 12 நடமாடும் நீதிமன்றங்கள் மோட்டார் வாகனச் சட்டம், 1988 (மையச் சட்டம் 59/1988)–ன் கீழ் பதிவு செய்யப்படும் சிறு குற்றங்கள் மற்றும் ஏனைய சட்டங்கள் தொடர்பான சிறு வழக்குகளை விசாரித்து வருகின்றன.

9.26. குற்றவியல் நடுவர் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள குற்றவியல் வழக்குகளை

விசாரிப்பதற்கென இம்மாநிலத்தில் 51 விரைவு நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.

9.27. இம்மாநிலத்தில் 10 கூடுதல் மாஸ்டர் நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றுள், நான்கு நீதிமன்றங்கள் சென்னை உயர்நீதிமன்றத்திலும், நான்கு சென்னை மாநகர உரிமையியல் நீதிமன்றத்திலும் மற்றும் இரண்டு சென்னை சிறு வழக்குகள் நீதிமன்றத்திலும் உள்ளன. இந்நீதிமன்றங்கள் வழக்காடும் நபர்களை அழைப்பாணை மூலம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்காகவும் மற்றும் வழக்கின் சாட்சியங்களை பதிவு செய்வதற்காகவும் செயல்படுகின்றன.

9.28. அறக்கட்டளைகளின் சொத்துக்களுக்கும் உரிய வயதடையாதவர்கள் மற்றும் காலஞ் சென்றவர்களின் எஸ்டேட் சொத்துக்களுக்கும் பொறுப்பு வகிப்பதற்காக சென்னையில் மாவட்ட

நீதிபதி பதவி நிலையில், அரசு தலைமை சொத்தாட்சியர் – பொறுப்பு சொத்தாட்சியர் இருக்கின்றார். இவருக்கு உதவியாக உரிமையியல் நீதிபதி பதவி நிலையில் துணைத் தலைமை சொத்தாட்சியர் – பொறுப்பு சொத்தாட்சியர் உள்ளார்.

## 10. நீதிமன்ற மேலாளர்கள்

சென்னை உயர்நீதிமன்றத்தின் முதன்மை அமர்வு, அதன் மதுரைக் கிளை, மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றங்களுக்கு உதவுவதற்காக 35 நீதிமன்ற மேலாளர் பணியிடங்கள் உதவி பதிவாளர் தரத்தில் ஒப்பளிக்கப்பட்டுள்ளன.

## 11. நீதிமன்ற கட்டடங்கள், நீதிபதிகளின் குடியிருப்புகள் மற்றும் இதர உட்கட்டமைப்பு வசதிகள்

2021–2022ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள் நீதியரசர்களுக்கான குடியிருப்புகள் மற்றும் இதர உட்கட்டமைப்பு

வசதிகளுக்காக ரூ.72.90 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

தற்பொழுது, 993 நீதிமன்றங்கள் சொந்த கட்டடங்களிலும், 112 நீதிமன்றங்கள் அரசு கட்டடங்களிலும், 85 நீதிமன்றங்கள் வாடகை கட்டடங்களிலும் செயல்பட்டு வருகின்றன. சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சார்நிலை நீதிமன்றங்களுக்கு உட்கட்டமைப்பு மற்றும் இதர வசதிகளின் தேவைக்கு ஏற்ப அவ்வப்போது அரசு நிதி ஒப்பளிப்பு செய்து வருகிறது.

## 12. ஒன்றிய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டம்

ஒன்றிய அரசின் நீதித்துறையானது, நீதிமன்றங்களின் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு, நீதிமன்றங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான "மத்திய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும்

திட்டம்" என்ற திட்டத்தினை மாநில அரசுகள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு நிதி உதவி அளித்து செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம் சார்நிலை நீதிமன்றங்களுக்கான கட்டடங்கள் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகளை கட்டுவதன் மூலம் நீதி வழங்குதலை மேம்படுத்த உதவுகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் பகிர்ந்தளிக்கப்படும் நிதி உதவி 2015–2016–ஆம் ஆண்டு முதல் 60:40 என்ற விகிதாச்சாரத்தில் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் சார்நிலை நீதிமன்றங்களுக்கான கட்டடங்கள் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகளை கட்டுவதன் மூலம் விரைந்து நீதி வழங்குவதற்கு வழிவகை செய்கிறது. ஒன்றிய அரசு 2021–2022 ஆம் நிதியாண்டிற்கு தமது பங்களிப்பு தொகையாக ரூ.35.66 கோடியினை விடுவித்துள்ளது.

## 13. நீதித்துறை அமைப்புகளை கணினிமயமாக்கும் திட்டம்

13.1. நாட்டில் உள்ள உயர்நீதிமன்றங்கள் மற்றும் மாவட்ட / சார்நிலை நீதிமன்றங்களை கணினிமயமாக்கும் திட்டங்களில் ஒருங்கிணைந்த கணினிமயமாக்கும் திட்டமும் ஒன்றாகும். இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள்களாவன:–

- ❖ நீதிமன்றங்களில் நாள்தோறும் நடைபெறும் நீதிமன்ற நிருவாகத்தினை சிறப்பாக முறைப்படுத்த உதவுதல்.
- ❖ நிலுவையில் உள்ள வழக்குகளை குறைக்கும் பொருட்டு நீதிமன்ற நிருவாகத்திற்கு உதவுதல்.
- ❖ வழக்கு தொடுப்பவர்களுக்கு வெளிப்படையான தகவல் அளித்தல்.

- ❖ நீதிபதிகளுக்கு சட்டம் மற்றும் நீதித்துறை சார்ந்த தரவுகளை பெற வழிவகை செய்தல்.

13.2. சென்னை உயர்நீதிமன்றத்தில் மின்னணு முறையில் மனு தாக்கல் செய்யும் வசதி செயல்படுத்தப்பட்டுள்ளது. அவ்வசதி சென்னை உயர்நீதிமன்றத்தின் முதன்மை அமர்வு மற்றும் அதன் மதுரைக் கிளையின் அனைத்து பயனாளர்களின் பயன்பாட்டிற்காக விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

13.3. நீதித்துறையை கணினிமயமாக்கல் திட்டம் இரண்டாம் கட்டத்தின் கீழ் NSTEP மொபைல் பயன்பாட்டிற்காக 2906 திறன் கைப்பேசிகள் வாங்கப்பட்டு அவைகள் சம்பந்தப்பட்ட மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. நீதிமன்ற கட்டளையைச் சார்வு செய்பவர் (முதுநிலை பெய்லீப் மற்றும் இளநிலை பெய்லீப்) மூலம் 29.12.2021 வரை

2,10,743 கட்டளைகள் பெறப்பட்டன மற்றும் 92,136 கட்டளைகள் வழங்கப்பட்டுள்ளன.

13.4. நீதிமன்ற வழக்குகளின் தற்போதைய நிலை, ஆணைகள் மற்றும் தீர்ப்புகள் பற்றிய தகவல்களை, வழக்கு தொடுப்பவர்கள் மற்றும் வழக்குரைஞர்கள் ஆகியோர் பெறுவதற்கு உயர்நீதிமன்ற வலைதளம் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

13.5. 42 மாவட்ட நீதிமன்ற வளாகங்களுக்கு லீஸ்டு லைன் இணைப்புகளும் மற்றும் அனைத்து நீதித்துறை அலுவலர்களுக்கும் தனி அடையாள எண்களும் கொடுக்கப்பட்டுள்ளன. அனைத்து மாவட்டங்களிலும் தொழில்நுட்ப பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

**14. தகவல் மற்றும் தொடர்பு தொழில் நுட்ப வசதி**

14.1. நீதிமன்ற தரவுகள் மற்றும் அரசு தொடர்பான தகவல்களை பகிர்வதற்காக நீதிமன்ற

வழக்குகள் கண்காணிப்பு அமைப்புடன் (CCMS) சென்னை உயர்நீதிமன்ற வழக்கு தகவல் அமைப்பை (HC-CIS) ஒருங்கிணைக்கும் பணி சென்னை உயர்நீதிமன்றத்தால் செயல்படுத்தப்பட்டுள்ளது.

- அரசு மனுதாரராகவோ / எதிர் மனுதாரராகவோ இருக்கும் நீதிமன்ற வழக்குகளை கண்காணிக்கவும், உரிய காலத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளுக்கு பதிலளிக்கவும் இந்த அமைப்பு அரசுக்கு உதவுகிறது.

- நீதிமன்ற வழக்குகள் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வரும் தேதி பற்றிய தகவல்களை தொடர்புடையவர்களுக்கு (மாநில அரசு) இந்த அமைப்பு மூலம் தெரிவிக்கப்படுகிறது.

- சம்பந்தப்பட்ட அலுவலர்களால் உரிய நேரத்தில், தக்க எதிர் மற்றும் மறுப்பு

ஆணை உறுதி ஆவணம் தாக்கல் செய்ய உதவியாக உள்ளது.

14.2. அலைபேசி எண்கள் பதிவு செய்யப்படாத வழக்குகளில் வழக்கறிஞர்கள் தங்களுடைய பதிவு எண் மற்றும் வழக்குகளில் ஆஜராகுதல் ஆகியவற்றின் அடிப்படையில் அவர்களின் அலைபேசி எண் இணைக்கப்படும். வழக்கறிஞர்கள் விவரணையாக்கம் செய்யப்பட்ட வழக்குகளின் பட்டியலிடப்படும் மற்றும் தீர்ப்புரைக்கப்படும் விவரங்களை குறுஞ்செய்தி மூலமாக பெறுவர். விவரணையாக்கம் செய்யப்பட்ட வழக்கு நீதிமன்றத்தில் பட்டியலிடப்பட்ட நாளில் தொடர்புடைய வழக்கறிஞர் அந்நீதிமன்ற நடைமுறையில் பங்குபெறுவதற்கு ஏற்ப ஒளி கலந்தாய்வு இணைப்பு அவருக்கு அனுப்பப்படுகிறது. அதற்கான தொகுதி (https://www.madrashighcourt.tn.gov.in/aims) என்ற மீத்தொடுப்பில் உள்ளது.

14.3. சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் பிரெய்லி அச்சு இயந்திரம் பொறுத்தப்பட்டுள்ளது. இவ்வச்சு இயந்திரம் ஒரு மணி நேரத்திற்கு 350 பிரெய்லி பக்கங்களை அச்சிடும் திறன் படைத்தது. இதனை பயன்படுத்துவது மிகவும் எளிது. நீதிமன்ற தீர்ப்புரைகள் / ஆணைகள் பிரெய்லி அச்சு மூலமாக பெறலாம் என்ற அலுவலக அறிவிப்பு சென்னை உயர்நீதிமன்ற அலுவல் இணையதளமான (http://www.hcmadras.tn.nic.in/)–ல் 15.11.2021 முதல் வெளியிடப்பட்டுள்ளது.

## 15. நீதித்துறை முத்திரைத்தாள் மின்னணுமயமாக்கல்

நீதிசார்ந்த மின்னணு முத்திரைத்தாள் முறையானது முதற்கட்டமாக சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் அதன் மதுரைக் கிளையிலும் செயல்படுத்தப்பட்டுள்ளது. இது அனைத்து முதன்மை மாவட்ட நீதிமன்றங்களிலும் விரிவுபடுத்தப்படவுள்ளது. நீதிசார்ந்த மின்னணு முத்திரையை பொதுமக்கள்

தாங்களாகவே இணையம் மூலம் உருவாக்கி பயன்படுத்தலாம் அல்லது திருவாளர்கள் ஸ்டாக் ஹோல்டிங் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா லிமிடெட் என்ற நிறுவனத்தின் மூலமாகவோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட வங்கிகள் மூலமாகவோ விண்ணப்பம் தாக்கல் செய்து பெறலாம். மேலும், பொதுமக்களுக்கு நீதிசாரா மின்னணு முத்திரைத் தாள்களையும் விற்பனை செய்வதற்கு திருவாளர்கள் ஸ்டாக் ஹோல்டிங் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா லிமிடெட் என்ற நிறுவனத்திற்கு அரசு அனுமதியளித்துள்ளது.

பாரத ஸ்டேட் வங்கியின் மின்னணு பரிவர்த்தனை வாயிலுடன் வழக்கு விவர தொகுப்புகளை இணைத்து நீதிமன்ற கட்டணங்களை மின்னணு பரிவர்த்தனை மூலமாக செலுத்த வழிவகை செய்யும் நோக்குடன் சென்னை உயர்நீதிமன்றம் பாரத ஸ்டேட் வங்கியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது.

சென்னை உயர்நீதிமன்றம், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை மற்றும் மாவட்ட நீதித்துறை வாயிலாக 31.12.2021 வரை பெறப்பட்ட மின்னணு நீதிமன்ற கட்டண விவரம் பின்வருமாறு:–

- சென்னை உயர்நீதிமன்றம் – ரூ.63,39,35,578/
- மதுரைக் கிளை – ரூ.18,68,48,023/–
- மாவட்ட நீதித்துறை – ரூ.2,80,44,164/–

**16. பாலின உணர்திறன் மற்றும் உள் இணக்கக் குழுவிற்கான இணைய முகப்பு**

பாலினம் தொடர்பான பிரச்சனை குறித்த புகார்களை (https://www.mhc.tn.gov.in/gsicc) என்ற இணையத்தில் பதிவு செய்வதற்கு பாலின உணர்திறன் மற்றும் உள் இணக்கக் குழுவிற்கான இணைய முகப்பு வழிவகை செய்கிறது. இம்முகப்பு பயனாளர்கள் எளிதாக பயன்படுத்தும் விதமாக ஆங்கிலம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளில் 29.10.2021 அன்று தொடங்கப்பட்டது. உயர்நீதிமன்ற

வளாகத்திற்குள் எழும் பாலினம் தொடர்பான புகார்களை தலைமைப் பதிவாளர் அலுவலக பணியாளர்கள் மற்றும் மற்ற நபர்கள் தங்களுடைய குறைகளை புகார்களாக மேற்காணும் இணையதளத்தில் பதிவு செய்ய இம்முகப்பு வழிவகை செய்கிறது.

## 17. செலவினங்களின் வகைப்பாடு

சென்னை உயர்நீதிமன்ற முதன்மை ஆயம் மற்றும் மதுரை கிளை ஆகியவை குறித்த செலவினங்கள், "சாட்டிய செலவினம்" எனவும், சார்நிலை நீதிநிருவாகம் குறித்த செலவினங்கள் "அனுமதிக்கப்பட்ட செலவினம்" எனவும் வகைப்படுத்தப்பட்டு உள்ளன.

## 18. தமிழ் வழியிலான சட்ட இதழ்

மாதமிருமுறை வழக்குரைஞர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக 'தீர்ப்பு திரட்டு' என்ற

பெயரில் தமிழ் வழியிலான சட்ட இதழ், வெளியிடப்பட்டு வருகிறது.

## 19. நீதித்துறை பயிற்சிக் கழகம்

நீதிபதிகள் குறிப்பாக மாவட்ட நீதிபதிகள், முதுநிலை உரிமையியல் நீதிபதிகள் மற்றும் உரிமையியல் நீதிபதிகள் மற்றும் நீதித்துறை பணியாளர்களுக்கு பயிற்சி அளிப்பதே இதன் முதன்மையான நோக்கமாகும் மற்றும் புதியதாக பணி நியமனம் செய்யப்படும் நீதிபதிகளின் பணித்திறனை வளர்த்துக் கொள்ள ஏதுவாக அறிமுகப் பயிற்சி வழங்கப்படுகிறது. மூன்று நீதித்துறை பயிற்சிக் கழகங்களில் சென்னையில் ஒன்றும், மதுரை மற்றும் கோயம்புத்தூரில் தலா ஒரு மண்டல மையங்களும் செயல்பட்டு வருகின்றன. 2021ஆம் ஆண்டில் மாவட்ட நீதிபதி மற்றும் முதுநிலை உரிமையியல் நீதிபதி தரத்தில் உள்ள 56 நீதிபதிகளுக்கு 40 மணி நேரம் சமரச பயிற்சி திட்டம் நடத்தப்பட்டுள்ளது.

## 20. உயர்நீதிமன்ற நடவடிக்கைகளில் தமிழ்மொழியை பயன்படுத்துதல்

சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழ் மொழியை அலுவல் மொழியாக பயன்படுத்த வேண்டுமென்பது இம்மாநிலத்தின் நீண்ட நாள் விருப்பம் மற்றும் கோரிக்கையாகும். இந்தக் கோரிக்கையானது, 11.10.2012 அன்று நடந்த உச்சநீதிமன்றத்தின் முழு நீதிமன்ற கூட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இக்கோரிக்கை குறித்து ஒன்றிய அரசிடம் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது.

## 21. தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நல நிதி

பணியில் இருக்கும்போது மரணமடையும் வழக்குரைஞர்களின் வாரிசுதாரர்கள் / நியமனதாரர்கள் ஆகியோருக்கு நிதியுதவி வழங்குவதற்காக ரூ.7.00 இலட்சம் தமிழ்நாடு வழக்குரைஞர்கள் நல நிதி மூலம் தற்பொழுது

வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இந்நிதிக்கு ஆண்டுதோறும் ரூ.8.00 கோடி மானியம் வழங்கப்படுகிறது.

## 22. இளம் வழக்குரைஞர் உதவித் தொகை

புதியதாக பதிவு செய்யப்பட்ட இளம் வழக்குரைஞர்களுக்கு மாதம் தோறும் ரூ.3,000/- இரண்டு ஆண்டுகளுக்கு குறிப்பிட்ட தகுதிகளின் அடிப்படையில் வழங்கப்படுகிறது.

## 23. தமிழ்நாடு வழக்குரைஞர்களின் எழுத்தர்கள் நல நிதி

பணியில் இருக்கும்போது மரணமடையும் வழக்குரைஞர்களின் எழுத்தர்களின் நலனை கருத்திற்கொண்டு, அவர்களின் நியமனதாரர்கள் / சார்ந்தவர்களுக்கு, தமிழ்நாடு வழக்குரைஞர்களின் எழுத்தர்கள் நல நிதியிலிருந்து ரூ.4.00 இலட்சம் வழங்கப்பட்டு வருகிறது.

## 24. தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணைக்குழு

24.1. இம்மாநிலத்தில் தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணைக்குழு, மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக் குழுவினை மாவட்டந்தோறும் அரசு ஏற்படுத்தியுள்ளது. மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழு மாநிலம் முழுவதும் நீதிமன்றங்கள் அமைந்துள்ள இடங்களில் வட்ட சட்டப்பணிகள் குழுவினை அமைத்துள்ளது. தற்போது, மாநிலத்தில் 32 மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுக்கள், 150 வட்ட சட்டப்பணிகள் குழுக்கள் மற்றும் 2 உயர்நீதிமன்ற சட்டப்பணிகள் குழுக்கள் இயங்கி வருகின்றன.

24.2. சமுதாயத்தில் மிகவும் நலிவடைந்த பிரிவினருக்கு இலவசமாக சட்டம் சார்ந்த சேவைப் பணிகளை வழங்கவும், பொருளாதார அல்லது ஏனைய இயலாமைகள் காரணமாக எந்த ஒரு குடிமகனுக்கும் நீதி கிடைப்பதற்கான வாய்ப்புகள் மறுக்கப்படக்

கூடாது என்பதை உறுதி செய்வதற்கும், தகராறுகளுக்குத் தீர்வு காணும் ஒரு மாற்று அமைப்பாக மக்கள் நீதிமன்றங்களை சட்டப்பூர்வமாக ஏற்படுத்துவதற்கும், சமுதாயத்தில் ஏழை எளிய மக்களுக்கு அவர்களுடைய உரிமைகள் குறித்து பயிற்றுவிக்கவும், சமூக நலன் குறித்த பல்வேறு சட்டங்கள் மற்றும் நிருவாக ஆணைகளின்படி அவர்களுக்குண்டான பயன்கள் மற்றும் சலுகைகளைப் பெற வழிவகை செய்யவும் 1987–ஆம் ஆண்டு சட்டப்பணிகள் ஆணைக்குழு சட்டம் (1994–ஆம் ஆண்டின் 59–வது சட்டப்படி திருத்தியமைக்கப்பட்டது) இயற்றப்பட்டது.

**சட்ட உதவி பெற தகுதியுடையோர்**

24.3. சட்டப்பணிகள் ஆணைக்குழு சட்டம், 1987, பிரிவு 12–ன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் அளவுகோல்களில் ஏதாவது ஒன்றையோ அல்லது அனைத்தையும் நிறைவு செய்யும் நபர்கள் வழக்கு

தொடுக்கவும், எதிர்த்து வழக்காடவும் சட்ட உதவி பெறவும் தகுதியுடையவர்களாவர்:–

(i) ஆதிதிராவிடர் (அல்லது) பழங்குடியினர்

(ii) அரசியலமைப்பு சட்டப் பிரிவு 23–ல் குறிப்பிடப்பட்டு உள்ளவாறு மனிதர்களை விற்பது மற்றும் வாங்குவது (அல்லது) வற்புறுத்தி வேலை வாங்குவது ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட நபர்

(iii) பெண் (அல்லது) குழந்தை

(iv) மாற்றுத் திறனாளிகள்

(v) பேரிடர்கள், இன வன்முறை, சாதி வன்கொடுமை, வெள்ளம், பஞ்சம், நில அதிர்ச்சி, தொழிற்சாலை பேரழிவு ஆகியவற்றால் பாதிப்பிற்கு உள்ளானவர்கள்

(vi) தொழிற்சாலை தொழிலாளர்கள்

(vii) சிறைக் காவலில் இருப்போர், பாதுகாப்பு இல்லம், இளம் குற்றவாளிகள் இல்லம்,

மன நல மருத்துவமனை அல்லது மனநல காப்பகம் இவைகளில் காவலில் உள்ளவர்கள்

(viii) சட்டப்பணிகள் ஆணைக்குழு சட்டம், 1987, பிரிவு 12(எச்)–ல் குறிப்பிட்டுள்ள வருடாந்திர வருமானத்திற்கு குறைவாக உட்பட்டவர்கள். இலவச சட்ட உதவி பெறுவோருக்கான ஆண்டு வருமான உச்ச வரம்பு ரூ.3,00,000/–ஆகும்.

**சட்ட உதவி வழக்குரைஞர் திட்டம்**

24.4. காவலில் உள்ளவர்கள் பிணையில் வெளிவருவதற்கும் மீண்டும் காவலில் வைப்பதற்கான ஆணையை எதிர்ப்பதற்கும், காவலில் உள்ளவர்கள் வழக்கை எதிர்கொள்வதற்கும் மற்றும் பாதகமான உத்தரவுகளை எதிர்த்து மேல் முறையீடு மற்றும் மறு ஆய்வு செய்வதற்கும், தேவையான சட்ட உதவிகளை அளிப்பதற்கும் இத்திட்டம் உதவுகிறது. மேலும், குற்றவியல் நீதிமன்ற நடுவரின் முன்பாக காவலில் வைப்பதற்காக அழைத்து வரப்படும்

நபர்கள் வழக்குரைஞர்கள் வைத்துக்கொள்ள வசதியற்றவர்களாக இருப்பின், அவர்களுக்கு சட்ட உதவி அளிப்பதற்கு, சட்ட உதவி வழக்குரைஞர்கள் உதவிபுரிகின்றனர்.

**மாற்றுத் தீர்வு மையங்கள்**

24.5. மாநிலத்தில் 31 மாற்றுத் தீர்வு மையங்கள் செயல்பட்டு வருகின்றன, அவை சமரச நடவடிக்கைகள், மக்கள் நீதிமன்றங்கள் மற்றும் பிற மாற்று முறை தீர்வுகளுக்கு இணைப்பு பாலமாக செயல்படுகின்றன.

**ஆலோசனை மற்றும் சமரச மையம்**

24.6. பிரச்சனைகளை அடிப்படையிலேயே தீர்த்து வைக்கும் ஒரு மாற்று முறை தீர்வு அமைப்பாகவழக்குகளை நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லாமலே உடன்பாடு எட்டுவதற்கு உதவும் ஒரு

கருவியாக ஆலோசனை மற்றும் சமரச மையங்கள் இயங்கி வருகின்றன.

**சட்டம் சார்ந்த உதவிகள்**

24.7. சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள ஏழை எளிய மக்கள் அரசு வழங்கும் நலத்திட்ட உதவிகளை பெறுவதற்கு சட்டப்பணிகள் ஆணைக் குழுக்கள் இலவசமாக சட்ட உதவிகள் அளித்து வருகின்றன. மேலும், குற்ற வழக்கில் பாதிக்கப்பட்டவர்கள் சட்ட உதவிகள் பெறுவதற்கும், மோட்டார் வாகன விபத்துகளில் பாதிக்கப்பட்டவர்கள் உரிய இழப்பீடு பெறுவதற்கும் உதவுகின்றன.

**மக்கள் நீதிமன்றம்**

24.8. மக்கள் நீதிமன்றங்கள், நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள வழக்கையோ அல்லது நீதிமன்ற அதிகார வரம்புக்குள் வருகின்ற எந்த பொருள் பற்றியோ அதில் சம்மந்தப்பட்ட

தரப்பினர்களுக்கிடையே ஒரு தீர்வு எட்டுவதற்கு நடத்தப்பட்டு வருகின்றன. நிரந்தர மக்கள் நீதிமன்றங்கள் சட்டப்பணி ஆணைக்குழு சட்டம், 1987, பிரிவு 22பி–ன்படி, 32 மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. உச்சநீதிமன்றம் முதல் வட்ட அளவிலான நீதிமன்றம் வரை அனைத்து நீதிமன்றங்களிலும் தேசிய மக்கள் நீதிமன்றங்கள் நடைபெற்று வருகின்றன. தேசிய மக்கள் நீதிமன்றத்தில் 2021ஆம் ஆண்டில் 1,91,604 வழக்குகள் முடிக்கப்பட்டு ரூ.1767,82,58,344/– தீர்வுத் தொகை பெறப்பட்டுள்ளது.

சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, வேலூர், கடலூர், சேலம், திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூர் மத்திய சிறைச்சாலைகளிலும் மற்றும் வேலூரில் உள்ள பெண்கள் தனிச்சிறைச்சாலையிலும் சட்ட உதவி மையம் மற்றும் மக்கள் சிறை நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. சென்னை புழலிலுள்ள மத்தியச் சிறைச்சாலையில் ஒரு சட்ட உதவி மையம்

இயங்கி வருகிறது. சிறைச்சாலை நீதிமன்றம் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நடைபெறுகிறது. சிறைச்சாலை சட்ட உதவி மையங்களில் சிறைவாசிகளிடமிருந்து மனுக்கள் பெறப்பட்டு அவை சட்ட உதவி மையங்களில் உள்ள உரிய பதிவேடுகளில் பதியப்பட்டு அவற்றின்மீது மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.

**நடமாடும் ஊர்தி**

24.9. சட்டப்பணிகள் ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட சட்ட உதவித் திட்டங்கள் மற்றும் செயல்முறைத் திட்டங்களை விளம்பரப்படுத்த மாநிலத்தின் விளம்பர இயக்கத்தின் ஒரு பகுதியாகவும், நடமாடும் நீதிமன்றம் நடத்திடவும், சட்ட விழிப்புணர்வு முகாம்கள் நடத்திடவும் மற்றும் எல்.சி.டி திரைப்படக்கருவி மூலம் விளம்பரப் படங்களை திரையிடவும் "நடமாடும் ஊர்தி" பயன்படுத்தப்படுகிறது,

**கிராம சட்ட விழிப்பு மற்றும் ஆதரவு மையங்கள்**

24.10. தேசிய சட்டப்பணிகள் ஆணைக் குழுவின் வழிகாட்டுதலின் பேரில் மாவட்ட சட்டப்பணிக் ஆணைக் குழுவின் உதவியுடன் நிலவியல், சமூகம் சார்ந்த தடைகளை எதிர்கொள்ளும் மக்களுக்கு சட்டச் சேவை நிறுவனங்களை அணுகுவதற்காக அனைத்து கிராமங்களில் அல்லது கிராமங்களின் தொகுப்பில் "கிராம சட்ட விழிப்பு மற்றும் ஆதரவு மையங்கள்" நிறுவப்பட்டுள்ளன.

ஆதரவு மையங்களை நாடும் மக்களுக்கு அம்மையத்தில் உள்ள பட்டியல் வழக்கறிஞர்கள் மற்றும் தன்னார்வ சட்ட தொண்டர்கள் ஆலோசனை மற்றும் அறிவுரைகளை வழங்குகின்றனர். மேலும் சட்ட உதவி தேவைப்படின் அருகிலுள்ள சட்ட உதவி மையங்களை அணுகுமாறு அறிவுரை வழங்குகின்றனர்.

**தொலைபேசி வழி சட்ட உதவி**

24.11. சென்னையிலுள்ள தமிழ்நாடு மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் சட்ட உதவி மையக் கட்டடத்தில் சட்ட உதவி மையம் ஒன்று தொலைபேசி வழி சட்ட உதவி அளிக்கும் பொருட்டு இயங்கி வருகின்றது. இம்மையத்திற்கு, சுழற்சி முறையில் காலை மற்றும் மாலை இருவேளையும், அனைத்து வேலை நாட்களிலும் நியமிக்கப்பட்ட வழக்குரைஞர்கள் பொதுமக்களின் சட்டம் சார்ந்த பிரச்சனைகளுக்கு தொலைபேசி வாயிலாக தக்க ஆலோசனைகள் மற்றும் அறிவுரைகள் வழங்குகின்றனர். சட்ட உதவி கோரும் பொதுமக்கள் 044-25342441 என்ற தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம். வழக்காடும் பொது மக்கள் தொடர்பு கொள்ள ஏதுவாக இலவச எண் 1800-4252-441 பயன்பாட்டில் உள்ளது.

## 25. அரசு வழக்காடும் துறை, உயர்நீதிமன்றம், சென்னை

மாநில தலைமை அரசு வழக்குரைஞரின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் அரசு வழக்காடல் துறை இயங்கி வருகிறது. 14 அலுவலகங்கள் அவரது கட்டுப்பாட்டில் உள்ளன. சென்னை உயர்நீதிமன்றத்தில் கூடுதல் தலைமை அரசு வழக்குரைஞர் அலுவலகங்கள் I, II, IV, V, VII, VIII & IX, மாநில குற்றவியல் வழக்குரைஞர் அலுவலகம், மாநில உரிமையியல் வழக்குரைஞர் அலுவலகங்கள் செயல்படுகின்றன மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில், கூடுதல் தலைமை அரசு வழக்குரைஞர் அலுவலகங்கள் III, VI, உரிமையியல் வழக்குரைஞர் அலுவலகம் மற்றும் கூடுதல் குற்றவியல் வழக்குரைஞர் அலுவலகங்கள் செயல்படுகின்றன. புதுதில்லியில் உள்ள உச்ச நீதிமன்றத்தில் மாநில அரசு வழக்குகள் சார்பாக

வாதாட இரண்டு கூடுதல் தலைமை அரசு வழக்குரைஞர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

**26. குற்ற வழக்குத் தொடர்வு இயக்ககம்**

26.1. குற்ற வழக்குத் தொடர்வு இயக்ககம் மாநிலத்திலுள்ள தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றங்களில் தொடுக்கப்பட்டுள்ள குற்ற வழக்குகளை திறம்பட நடத்துதல் மற்றும் இந்நீதிமன்றங்களின் அரசு குற்றவியல் வழக்கு நடத்துனர்களின் பணித்திறனை கண்காணித்தல் போன்றவற்றின் மீது முழுக்கட்டுப்பாடு செலுத்தும் இயக்ககமாக உள்ளது. இவை தவிர, அரசு குற்றவியல் வழக்கு நடத்துனர்களை விழிப்புப்பணி, காவல்துறை, சிறைத்துறை, பொது சுகாதாரம், விவசாயத்துறை, மருந்துக்கட்டுப்பாடு மற்றும் விதைச்சான்று இயக்குநரகம் போன்ற

துறைகளில் அயற்பணியில் சட்ட ஆலோசகர்களாக பணிபுரிந்து வருகின்றனர்.

26.2. உச்சநீதிமன்றம் மற்றும் அனைத்து மாநிலங்களில் உள்ள உயர்நீதிமன்றங்களின் முக்கியமான தீர்ப்புகள் தமிழ்நாடு அரசு குற்ற வழக்கு நடத்துனர் மாத இதழில் வெளியிடப்படுகின்றன. இது அரசு வழக்கு நடத்துனர்களுக்கு குற்றவியல் வழக்குகளை நடத்த பெரும் உதவியாக உள்ளது. தலைமை அலுவலகத்திலும் மண்டல மற்றும் மாவட்ட தலைமை அலுவலகத்திலும் சட்ட நூல்கள் அடங்கிய நூலகங்கள் ஏற்படுத்தி அவற்றை பராமரிக்கப்பட்டு வருகின்றன.

26.3. மதுரையில் உள்ள தமிழ்நாடு மாநில நீதித்துறை பயிற்சி கழகத்தின் மூலம் புதிதாக பணியில் அமர்த்தப்பட்ட 66 கூடுதல் வழக்கு நடத்துனர்கள் நிலை–2ற்கு இரண்டு வார கால அறிமுகப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

## 27. முடிவுரை

நீதித்துறை சுதந்திரமாகச் செயல்படுவதற்கு மட்டுமின்றி அதன் நிருவாகம் மற்றும் ஏனைய தொடர்புடைய செயலாக்கத்திற்குத் தேவையான உடனடி ஆதரவையும் உதவியையும் இந்த அரசு ஏற்படுத்திக் கொடுக்கும். விரைந்து நீதி வழங்குவது சிறந்த ஆளுகையின் ஒரு இன்றியமையாத தனிச்சிறப்பு ஆகும். இந்த உயரிய குறிக்கோளை இனிவரும் காலங்களிலும் எய்த அரசு உறுதி பூண்டுள்ளது.

**எஸ். ரகுபதி**
சட்டத்துறை அமைச்சர்

**பிற்சேர்க்கை – 1**

*(பத்தி 2 – ஐக் காண்க)*

**தமிழ்நாடு நீதித்துறையின் படிநிலை அமைப்பு**

**முதன்மை இருப்பிட உயர்நீதிமன்றம், சென்னை மற்றும் மதுரையிலுள்ள சென்னை உயர்நீதிமன்றக் கிளை**

| ***உரிமையியல் நீதிமன்றங்கள்*** | | | ***குற்றவியல் நீதிமன்றங்கள்*** | |
|---|---|---|---|---|
| **சென்னை மாநகர்** | **வெளியூர்** | | **சென்னை மாநகர்** | **வெளியூர்** |
| மாநகர உரிமையியல் நீதிமன்றங்கள் | மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றங்கள் | | பெருநகர குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் | மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றங்கள் |
| சிறுவழக்குகள் நீதிமன்றங்கள் | சார்பு நீதிமன்றங்கள் | | | தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் |
| | மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் | | | குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் |
| | மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்கள் | | | |

## பிற்சேர்க்கை - 2

*(பத்தி 4– ஐக் காண்க)*

### சென்னை மாநகரில் செயல்பட்டு வரும் நீதிமன்றங்கள் / தீர்ப்பாயங்களின் எண்ணிக்கை பற்றிய விவரம்

| வ. எண் | நீதிமன்றங்களின் / தீர்ப்பாயங்களின் பெயர் | மாவட்ட நீதிபதி | | முதுநிலை உரிமையியல் நீதிபதி | | உரிமையியல் நீதிபதி |
|---|---|---|---|---|---|---|
| | | மாவட்ட நீதிமன்றங்கள் | மத்திய குற்ற புலனாய்வு வழக்கு தனி நீதிமன்றங்கள் | பெருநகர குற்றவியல் நடுவர் | இதர வகை பிரிவு | |
| 1. | மாநகர உரிமையியல் நீதிமன்றங்கள் | 18 | 6 | -- | 28 | 1 |
| 2. | சிறு வழக்குகள் நீதிமன்றங்கள் | 1 | -- | -- | 8 | 8 |
| 3. | பெருநகர மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள் | 2 | -- | 1 | 26@ | 8* |
| 4. | தொழிலாளர் நல நீதிமன்றங்கள் | 4 | -- | -- | -- | -- |
| 5. | தொழில் தீர்ப்பாயம் | 1 | -- | -- | -- | -- |
| 6. | விற்பனை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயம் | 1 | -- | -- | 1 | -- |
| 7. | அரசுப் போக்குவரத்து மேல்முறையீட்டு தீர்ப்பாயம் | 1 | -- | -- | -- | -- |
| 8. | இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் கீழ் வரும் தனி நீதிமன்றம் | 1 | -- | -- | -- | -- |
| 9. | தலைமை சொத்தாட்சியர் மற்றும் பொறுப்பு சொத்தாட்சியர் | 1 | -- | -- | -- | -- |
| 10. | துணை சொத்தாட்சியர் மற்றும் பொறுப்பு சொத்தாட்சியர் | -- | -- | -- | -- | 1 |
| 11. | குடும்ப நல நீதிமன்றங்கள் | 8 | -- | -- | -- | -- |
| 12. | மகளிர் நீதிமன்றம் | 1 | -- | -- | -- | -- |
| 13. | தமிழ்நாடு முதலீட்டாளர்கள் (நிதி நிறுவனங்களில்) பாதுகாப்புச் சட்டம் தனிநீதிமன்றம் | 1 | -- | -- | -- | -- |
| 14. | போதைமருந்துகள் மற்றும் மனமயக்கப்பொருட்கள் தடுப்புச்சட்டம் தனிநீதிமன்றங்கள் | 2 | -- | -- | -- | -- |
| 15. | குண்டு வெடிப்பு வழக்குகளை விசாரிப்பதற்கான அமர்வு நீதிமன்றம் | 1 | -- | -- | -- | -- |
| 16. | சென்னை மாநகராட்சி, சென்னை விற்பனை வரி மேல்முறையீட்டு தீர்ப்பாயம் | 1 | -- | -- | -- | -- |
| 17. | உறுப்பினர் செயலர், தமிழ்நாடு மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழு, சென்னை | 1 | -- | -- | -- | -- |
| 18. | துணைச் செயலர், தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணையக்குழு | -- | -- | -- | 1 | -- |
| 19. | செயலாளர், மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, சென்னை | -- | -- | -- | 1 | -- |
| 20. | ஊழல் வழக்குகளை விசாரிப்பதற்கென சிறப்பு நீதிமன்றம் | -- | -- | -- | 1 | -- |
| 21. | மோட்டர் வாகன விபத்து இழப்பீடு வழக்குகள் - சிறப்பு நீதிமன்றங்கள் | -- | -- | -- | 2 | -- |
| 22. | நிரந்தர மக்கள் நீதிமன்றம் | 1 | -- | -- | -- | -- |
| 23. | தலைவர், தமிழ்நாடு வக்ஃப் தீர்ப்பாயம் | 1 | -- | -- | -- | -- |
| 24. | அமர்வு நீதிபதி, தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மீதான குற்றவியல் வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் | 2 | -- | -- | 1 | -- |
| 25. | பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளை பாதுகாக்கும் (POCSO)-ன் பதிவு செய்யப்படும் வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் | 1 | -- | -- | -- | -- |
| | மொத்தம் | **50** | **6** | **1** | **69** | **18** |

**மொத்த நீதிமன்றங்களின் எண்ணிக்கை - 144**

**( மாவட்ட நீதிபதிகள் -56, முதுநிலை உரிமையியல் நீதிபதிகள் -70, உரிமையியல் நீதிபதிகள்-18)**

@ **2 நடமாடும் நீதிமன்றங்கள் உட்பட**

*** குற்றவியல் நடுவர் தரத்தில் 5 விரைவு நீதிமன்றங்கள், 2 நில அபகரிப்பு வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றங்கள் மற்றும் ஒரு கூடுதல் மகளிர் நீதிமன்றம் உட்பட**

## பிற்சேர்க்கை –3

(பத்தி 4– ஐக் காண்க)

### மாநிலத்தில் செயல்படும் சார்நிலை நீதிமன்றங்கள் மற்றும் தீர்ப்பாயங்களின் எண்ணிக்கை பற்றிய விவரம்

| | | | மாவட்ட நீதிபதி | | | | | | | | | | முதுநிலை உரிமையியல் நீதிபதி | | | | | | | உரிமையியல் நீதிபதி | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வரிசை எண் | மாவட்டங்கள் | மாவட்ட நீதிமன்றங்கள் | குடிமை உரிமை பாதுகாப்புச் சட்ட / எஸ்சி &எஸ்டி (வன்கொடுமைகள் தடுப்பு) சட்ட தனி நீதிமன்றங்கள் | குண்டு வெடிப்பு வழக்கு/ இனக்கலவர வழக்கு நீதிமன்றங்கள் | தொழிலாளர் நல நீதிமன்றங்கள் | தனி நீதிமன்றம் இன்றியமையாப் பொருட்கள் சட்டம்/ போதை மருந்துகள் மற்றும் மன மயக்கப் பொருட்கள் தடுப்புச் சட்டம் | தனி நீதிமன்றங்கள் மத்திய புலனாய்வுத்துறை வழக்கு / முதலீட்டாளர்கள் பாதுகாப்புச் சட்டம் வழக்கு | குடும்ப நல நீதிமன்றங்கள்/விரைவு நீதிமன்றங்கள் | மகளிர் நீதிமன்றங்கள் | தனி நீதிமன்றங்கள் மோட்டார் வாகன விபத்து இழப்பீடு | மக்கள் நீதிமன்றம் | தனி நீதிமன்றங்கள் POCSO Act | தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் | சார்பு நீதிமன்றங்கள் | தனி நீதிமன்றம் மோட்டார் வாகன விபத்து இழப்பீடு | தனி நீதிமன்றங்கள் நில எடுப்பு வழக்குகள் | ஊழல் வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றங்கள் | மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு | மாநில போக்குவரத்து மேல்முறையீட்டு தீர்ப்பாயம் | மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் | குற்றவியல் நடுவர் நீதிமன்றங்கள் | விரைவு நீதிமன்றங்கள் / கூடுதல் மகளிர் நீதிமன்றங்கள் | தனி நீதிமன்றங்கள் நில அபகரிப்பு வழக்குகள் | நடமாடும் நீதிமன்றங்கள் | மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்கள் |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 1. | அரியலூர் | 2 | -- | -- | -- | -- | -- | 1 | 1 | -- | 1 | -- | 1 | 3 | -- | 2 | -- | 1 | -- | 3 | 4 | 1 | -- | -- | 1 |
| 2. | கோயம்புத்தூர் | 5 | -- | 1 | 2 | 1* | 2## | 2 | 1 | -- | 1 | 1 | 1 | 7 | 1 | -- | 1 | 1 | 2 | 10 | 13 | 3# | 1 | 1 | 2 |
| 3. | கடலூர் | 4 | 1 | -- | 1 | -- | -- | 1 | 1 | -- | 1 | 1 | 1 | 9 | 1 | 1 | -- | 1 | -- | 10 | 10 | 1# | 1 | -- | 4 |
| 4. | தருமபுரி | 2 | -- | -- | -- | -- | -- | 1 | 1 | 1 | 1 | -- | 1 | 4 | 1 | -- | -- | 1 | -- | 4 | 5 | 2# | 1 | -- | 1 |
| 5. | திண்டுக்கல் | 2 | 1 | -- | -- | -- | -- | 2### | 1 | -- | 1 | -- | 1 | 6 | 1 | -- | -- | 1 | -- | 6 | 6 | 2# | -- | 1 | 4 |
| 6. | ஈரோடு | 5 | -- | -- | -- | -- | -- | 1 | 1 | 1 | 1 | -- | 1 | 7 | 1 | -- | -- | 1 | 1 | 8 | 9 | 3# | 1 | 1 | 1 |
| 7. | காஞ்சிபுரம் | 3 | -- | -- | 1 | -- | -- | 2### | 1 | -- | 1 | 1 | 1 | 7 | -- | -- | -- | 1 | -- | 8 | 12 | 3# | -- | 1 | 3 |
| 8. | கன்னியாகுமரி | 3 | -- | -- | -- | -- | -- | 2### | 1 | -- | 1 | 1 | 1 | 7 | -- | -- | -- | 1 | -- | 9 | 7 | 3# | -- | -- | 2 |
| 9. | கரூர் | 1 | -- | -- | -- | -- | -- | 1 | 1 | -- | 1 | -- | 1 | 3 | -- | -- | -- | 1 | -- | 3 | 4 | 2# | 1 | -- | 2 |
| 10. | கிருஷ்ணகிரி | 3 | -- | -- | 1 | -- | -- | 1 | 1 | 1 | 1 | -- | 1 | 6 | 1 | -- | -- | 1 | -- | 3 | 4 | 2# | 1 | -- | 3 |
| 11. | மதுரை | 6 | 1*# | 1** | 1 | 3* | 2## | 1 | 1 | 1 | 1 | 1 | 2 | 8 | 1 | -- | 1 | 1 | 2 | 7 | 11 | 3# | 1 | 1 | 2 |
| 12. | நாகப்பட்டினம் | 2 | -- | -- | -- | -- | -- | 1 | 1 | -- | 1 | 1 | 1 | 3 | -- | -- | -- | 1 | -- | 4 | 5 | 3# | -- | -- | 2 |

## பிற்சேர்க்கை-3 ன் தொடர்ச்சி

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 13. | நாமக்கல் | 2 | 1 | -- | -- | -- | -- | 1 | 1 | -- | 1 | -- | 1 | 5 | -- | -- | -- | 1 | -- | 8 | 7 | 2# | 1 | 1 | -- |
| 14. | நீலகிரி | 1 | -- | -- | 1 | -- | -- | 1 | 1 | -- | 1 | -- | -- | 3 | -- | -- | -- | 1 | -- | 3 | 3 | 2# | 1 | -- | 2 |
| 15. | பெரம்பலூர் | 1 | 1 | -- | -- | -- | -- | 1 | 1 | -- | 1 | -- | 1 | 1 | -- | -- | -- | 1 | -- | 2 | 2 | 1# | 1 | -- | 2 |
| 16. | புதுக்கோட்டை | 2 | 1 | -- | -- | 1* | -- | 1 | 1 | -- | 1 | -- | 1 | 4 | -- | -- | -- | 1 | -- | 3 | 4 | 1# | -- | -- | 4 |
| 17. | இராமநாதபுரம் | 2 | 1 | -- | -- | -- | -- | 2### | 1 | -- | 1 | -- | 1 | 3 | -- | -- | -- | 1 | -- | 3 | 4 | 1# | 1 | -- | 4 |
| 18. | சேலம் | 4 | -- | -- | 1 | 1* | -- | 2### | 1 | 1 | 1 | 1 | 1 | 7 | 2 | -- | 1 | 1 | 1 | 10 | 13 | 3# | 1 | 1 | 2 |
| 19. | சிவகங்கை | 2 | 1 | -- | -- | -- | -- | 1 | 1 | -- | 1 | 1 | 1 | 3 | -- | -- | 1 | 1 | -- | 4 | 4 | 2# | -- | -- | 5 |
| 20. | தஞ்சாவூர் | 3 | 1*# | -- | 1 | 1* | -- | 2### | 1 | 1 | 1 | 1 | 2 | 5 | 1 | -- | -- | 1 | -- | 6 | 7 | 3# | 1 | -- | 3 |
| 21. | தேனி | 2 | 1 | -- | -- | -- | -- | 2### | 1 | -- | 1 | -- | 1 | 3 | -- | -- | -- | 1 | -- | 5 | 5 | 3# | 1 | -- | -- |
| 22. | தூத்துக்குடி | 3 | 1 | -- | -- | -- | -- | 1 | 1 | -- | 1 | 1 | 1 | 3 | -- | -- | -- | 1 | 1 | 6 | 9 | 2 | 1 | -- | 1 |
| 23. | திருச்சி | 3 | 1*# | -- | 1 | -- | -- | 1 | 1 | 1 | 1 | -- | 1 | 8 | 1 | -- | 1 | 1 | 1 | 10 | 10 | 1# | 1 | 1 | 1 |
| 24. | திருநெல்வேலி | 4 | 1*# | -- | 1 | -- | -- | 2### | 1 | -- | 1 | 1 | 1 | 8 | 1 | -- | 1 | 1 | 1 | 13 | 12 | 1# | 1 | 1 | 4 |
| 25. | திருப்பூர் | 4 | -- | -- | -- | -- | -- | 1 | 1 | 1 | 1 | -- | 1 | 7 | -- | -- | -- | 1 | 1 | 7 | 10 | 2# | 1 | -- | 2 |
| 26. | திருவள்ளூர் | 5 | -- | -- | -- | -- | -- | 1 | 1 | 1 | 1 | -- | 1 | 6 | 1 | 1 | -- | 1 | -- | 8 | 9 | 4 | 1 | -- | 4 |
| 27. | திருவண்ணாமலை | 2 | 1 | -- | -- | -- | -- | 2### | 1 | -- | 1 | 1 | 1 | 5 | 1 | -- | -- | 1 | -- | 8 | 7 | 2# | -- | -- | 2 |
| 28. | திருவாரூர் | 1 | -- | -- | -- | -- | -- | 1 | 1 | -- | 1 | -- | 1 | 2 | -- | -- | -- | 1 | -- | 3 | 4 | 2# | -- | -- | 3 |
| 29. | வேலூர் | 4 | 1 | -- | 2 | -- | -- | 2### | 1 | -- | 1 | 1 | 1 | 7 | 1*** | 2 | -- | 1 | 1 | 10 | 15 | 2# | -- | -- | 4 |
| 30. | விழுப்புரம் | 4 | 1 | -- | -- | 1 | -- | 2### | 1 | 1 | 1 | 1 | 1 | 9 | 3 | -- | 1 | 1 | -- | 15 | 11 | 2# | 1 | 1 | 2 |
| 31. | விருதுநகர் | 3 | 1 | -- | -- | -- | -- | 1 | 1 | -- | 1 | 1 | 1 | 6 | -- | -- | -- | 1 | -- | 5 | 8 | 2# | 1 | -- | 3 |
| | **மொத்தம்** | 90 | 17 | 2 | 13 | 8 | 4 | 43 | 31 | 10 | 31 | 15 | 32 | 165 | 18 | 6 | 7 | 31 | 11 | 204 | 234 | 66 | 21 | 10 | 75 |
| | | **மாவட்ட நீதிபதி -264** | | | | | | | | | | | **முதுநிலை உரிமையியல் நீதிபதி- 270** | | | | | | | **உரிமையியல் நீதிபதி - 610** | | | | | |
| | | | | **மொத்த நீதிமன்றங்களின் எண்ணிக்கை - 1144** | | | | | | | | | | | | | | | | | | | | | |

* இன்றியமையா பொருட்கள் சட்டத்தின் கீழ் இயங்கும் ஒரு தனி நீதிமன்றம் உட்பட
# ஒரு கூடுதல் மகளிர் நீதிமன்றம் உட்பட (குற்றவியல் நடுவர் தரத்தில்)
** இனக் கலவர வழக்கு தொடர்பான நீதிமன்றம்
## முதலீட்டாளர்கள் பாதுகாப்புச் சட்டம் தொடர்பான ஒரு தனி நீதிமன்றம் உட்பட
*** மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு தீர்ப்பாயம்
### மாவட்ட நீதிபதி தரத்தில் ஒரு விரைவு நீதிமன்றம் உட்பட
*# குடியுரிமை பாதுகாப்பு சட்ட தனி நீதிமன்றம்

## பிற்சேர்க்கை-4

*(பத்தி 9.21 -வைக் காண்க.)*

## நில அபகரிப்பு வழக்குகளுக்கான தனி நீதிமன்றங்களின் விவரம்

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | இடம் | நீதிமன்றங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | சென்னை | சென்னை மாநகரம் | 2 |
| 2. | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் | 1 |
| 3. | கடலூர் | கடலூர் | 1 |
| 4. | தருமபுரி | தருமபுரி | 1 |
| 5. | ஈரோடு | ஈரோடு | 1 |
| 6. | காஞ்சிபுரம் | காஞ்சிபுரம், செங்கல்பட்டு | 2 |
| 7. | கரூர் | கரூர் | 1 |
| 8. | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி | 1 |
| 9. | மதுரை | மதுரை மாநகரம் | 1 |
| 10. | நாமக்கல் | நாமக்கல் | 1 |
| 11. | பெரம்பலூர் | பெரம்பலூர் | 1 |
| 12. | புதுக்கோட்டை | புதுக்கோட்டை | 1 |
| 13. | இராமநாதபுரம் | இராமநாதபுரம் | 1 |

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | இடம் | நீதிமன்றங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 14. | சேலம் | சேலம் மாநகரம் | 1 |
| 15. | தஞ்சாவூர் | தஞ்சாவூர் | 1 |
| 16. | நீலகிரி | உதகமண்டலம் | 1 |
| 17. | தேனி | தேனி | 1 |
| 18. | திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி மாநகரம் | 1 |
| 19. | தூத்துக்குடி | தூத்துக்குடி | 1 |
| 20. | திருநெல்வேலி | திருநெல்வேலி மாநகரம் | 1 |
| 21. | திருப்பூர் | திருப்பூர் | 1 |
| 22. | திருவள்ளூர் | திருவள்ளூர் | 1 |
| 23. | விழுப்புரம் | விழுப்புரம் | 1 |
| 24. | விருதுநகர் | விருதுநகர் | 1 |
| **மொத்தம்** | | | **26** |

*******



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 23.04.2022 அன்று சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்ற விழாவில், சென்னை, எழும்பூரில், வணிக சம்பந்தமான வழக்குகளை விசாரிப்பததெற்கென 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வணிக நீதிமன்றத்திற்கான கட்டடத்தை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், மாண்பமை உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு.என்.வி.ரமணா, மாண்பமை உச்சநீதிமன்ற நீதியரசர்கள் நீதிபதி திரு.வி.இராமசுப்பிரமணியன், நீதிபதி திரு.எம்.எம்.சுந்தரேஷ், மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி திரு.முனீஷ்வர் நாத் பண்டாரி, மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் திரு.எஸ்.இரகுபதி, அரசு தலைமை வழக்கறிஞர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



மாண்பமை உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு.என்.வி.ரமணா அவர்கள் 23.04.2022 அன்று சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்ற விழாவில், சென்னை உயர்நீதிமன்றத்தின் பல்வேறு பிரிவுகளுக்கு இடவசதி வழங்கும் பொருட்டு, சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் 20 கோடியே 24 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள நீதிமன்றக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டி, 20 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சங்கராபுரம் மற்றும் பரமத்தியில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகளை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், மாண்பமை உச்சநீதிமன்ற நீதியரசர்கள் நீதிபதி திரு.வி.இராமசுப்பிரமணியன், நீதிபதி திரு.எம்.எம்.சுந்தரேஷ், மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி திரு.முனீஷ்வர் நாத் பண்டாரி, மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் திரு.எஸ்.இரகுபதி, அரசு தலைமை வழக்கறிஞர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 23.04.2022 அன்று சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்ற விழாவில், நீதித்துறையின் உட்கட்டமைப்புத் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் பல்வேறு நீதிமன்றங்களை அமைக்கும் வண்ணம் சென்னையில் 4.24 ஏக்கர் நிலத்தை நீதித்துறைக்கு வழங்கும் அரசாணையை மாண்பமை உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு.என்.வி.ரமணா, மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி திரு.முனீஷ்வர் நாத் பண்டாரி ஆகியோரிடம் வழங்கினார்.




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 23.04.2022 அன்று சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்ற விழாவில், தமிழ்நாடு வழக்கறிஞர் நலநிதியத்திலிருந்து, உயிரிழந்த 5 வழக்கறிஞர்களின் வாரிசுதாரர்களுக்கு தலா 7 இலட்சம் ரூபாய் வீதம், மொத்தம் 35 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை நிதியுதவியாக வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், மாண்பமை உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு.என்.வி.ரமணா, மாண்பமை உச்சநீதிமன்ற நீதியரசர்கள் நீதிபதி திரு.வி.இராமசுப்பிரமணியன், நீதிபதி திரு.எம்.எம்.சுந்தரேஷ், மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி திரு.முனீஷ்வர் நாத் பண்டாரி, மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் திரு.எஸ்.இரகுபதி, அரசு தலைமை வழக்கறிஞர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை—600 001.

Printed by Govt. Central Press, Chennai - 600 001.

# HOME, PROHIBITION AND EXCISE DEPARTMENT

## ADMINISTRATION OF JUSTICE

## POLICY NOTE
## 2022 - 2023

## DEMAND No. 3

**S. REGUPATHY**
Minister for Law

©
Government of Tamil Nadu
2022